DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
Spl.S.C.No.43/2025
P.W.1

| | | |
|---|---|---|
| Name | : | திரு.அஜித்குமார் |
| Father's Name | : | திரு.பொன்னுசாமி |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 27 |

(Accused 1 to 10 are present)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 9th day of April 2026.

**முதல் விசாரணை**

நான் மணப்பாறை, ஆமணக்கம்பட்டியில் வசித்து வருகிறேன். நான் பறை அடிக்கும் கலைக்குழு வைத்து தொழில் செய்து வருகிறேன். நான் இந்து பறையர் வகுப்பைச் சேர்ந்தவர் ஆவேன். எதிரிகள் அனைவரையும் தெரியும். எதிரிகள் அனைவரும் இந்து ஊராளி கவுண்டர் வகுப்பை சேர்ந்தவர்கள் ஆவார்கள். கடந்த 06.09.2024ம் தேதி பிள்ளையார் கோவில் பட்டியில் தப்பு செட்டு குழு வேலை முடித்து மாலை 4.00 மணியளவில் பன்னாங்கொம்பு பஸ் ஸ்டாப் அருகில் உள்ள நியூ அய்யங்கார் பேக்கரியில் சம்பள பணம் பிரித்துக் கொடுத்துவிட்டு வண்டியில் உட்கார்ந்து கொண்டு டீ குடித்துக்கொண்டு இருந்தேன். அப்போது பெயர் தெரியாத நபர்கள் என்னை கூப்பிட்டு என்னடா பார்க்கிறாய் என்று வலிய சண்டை இழுத்து அடித்தார்கள். எதற்காக அடிக்கிறீர்கள் என்று கேட்டதற்கு என் அம்மாவைப் பற்றி தரக்குறைவாக பேசினார்கள்.

என்னுடன் தொழில் பார்க்கும் தப்பட்டி நண்பர்களை வரச்சொன்னேன். எனது போனை வாங்கி உடைத்துவிட்டார்கள். என்னை தனியாக அழைத்துச் சென்று பறையன் என்று சொல்லி அடித்தார்கள். என்னுடன் தப்படிக்கும் நண்பர்கள் வந்து சண்டையை விலக்கிவிட்டார்கள். நீதிமன்றத்தில் இருக்கக்கூடிய எதிரிகள் தான் என்னை அன்றைய தினம் தாக்கியவர்கள் ஆவார்கள். நான் நடந்த சம்பவத்திற்கு புத்தாநத்தம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தேன். அந்த புகார் மனு **அ.த.சா.ஆ.1** ஆகும். மணப்பாறை நீதித்துறை நடுவர் முன்பாக 04.12.2024 அன்று வாக்குமூலம் அளித்தேன். அந்த வாக்குமூலம் **அ.த.சா.ஆ.2** ஆகும். இந்த வழக்கு தொடர்பாக காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**<u>குறுக்கு விசாரணை(1 முதல் 6 எதிரிகள் தரப்பில்)</u>**

நடந்ததாக சொல்லக் கூடிய சம்பவம் ஐயங்கார் பேக்கரியின் வெளியில் வைத்து நடைபெற்றது. நான் அந்த ஐயங்கார் பேக்கரிக்கு அதற்கு முன்பு சென்றிருக்கிறேன். அந்த பேக்கரியில் கண்காணிப்பு கேமராக்கள் பொருத்தப்பட்டு இருக்கிறது. சம்பவம் முடிந்து சுமார் அரை மணி நேரத்தில் போலீசார் அந்த இடத்திற்கு வந்தார்கள். அப்போது என்னிடம் என்ன நடந்தது என்று கேட்டு எழுதி வாங்கி விட்டார்கள். நான் போலீசாரிடம் கொடுத்த புகார் மனுவில் இருசக்கர வாகனத்தில் அமர்ந்து டீ குடித்துக் கொண்டு இருந்தபோது சம்பவம் நடைபெற்றதாக சொல்லவில்லை. நான் முதன் முதலில் காவல் நிலையத்தில் கொடுத்த புகார் மனுவில் பன்னாங்கொம்பு கவுண்டன் மனை களத்தைச் சேர்ந்த வெள்ளைச்சாமி மகன் பெருமாள் மற்றும் அடையாளம் தெரியாத 18 நபர்கள் என்று தான் குறிப்பிட்டு இருந்தேன் என்றால் சரிதான். என் அம்மாவைப் பற்றி தவறாக பேசினார்கள் என்ற விவரத்தை புகார்

மனுவிலும் போலீசார் என்னை விசாரித்த போதும் நான் கூறியிருக்கிறேன். நான் தாக்கப்பட்ட போது தொலைபேசி மூலம் என் நண்பர்களை அழைத்ததாகவும் அவர்கள் அங்கு வந்தார்கள் என்ற விவரத்தையும் புகாரிலும், போலீசார் என்னை விசாரித்த போதும் நான் கூறியிருக்கிறேன். அந்த தினம் என்னை தாக்கிய நபர்கள் என்னுடைய செல்போனை உடைத்தார்கள் என்ற விபரத்தை புகாரிலும், போலீசார் என்னை விசாரித்த போதும் நான் கூறியிருக்கிறேன். சம்பவம் நடந்த அன்று என்னை தாக்கிய நபர்களின் பெயரோ, அடையாளமோ, ஊர் பெயரோ தெரியாது என்றால் சரிதான். சம்பவத்திற்குப் பிறகு ஐயங்கார் பேக்கரியில் பொருத்தப்பட்டு இருந்த கண்காணிப்பு கேமராவில் பதிவுகளை போலீசார் என்னிடம் காண்பித்து விசாரிக்கவில்லை. ஆனால் பன்னாங்கொம்பை சேர்ந்தவர்கள் அதை வீடியோ எடுத்து வைத்திருக்கிறார்கள். அந்த வீடியோவில் நான் தான் முதன்முதலாக பாட்டிலை எடுத்துக்கொண்டு அடிக்கச் சென்ற காட்சிகள் பதிவாகி இருக்கிறது என்றால் சரியல்ல. அதன் காரணமாக அந்த வீடியோ என்னாலும் காவல்துறையினராலும் திட்டமிட்டு மறைக்கப்பட்டு இருக்கிறது என்றால் சரியல்ல. எனக்கும் எதிரிகளுக்கும் இடையில் முன்பின் வழக்கம் கிடையாது, விரோதமும் கிடையாது. அதனால் அன்றைய தினம் எதிரிகள் என்னை தாக்கவும் இல்லை என்றும், தாக்க முயற்சிக்கவும் இல்லை என்றும் சொன்னால் சரியல்ல. முதல் எதிரி எந்த சாதியைச் சேர்ந்தவர் என்ற விவரம் எனக்கு தெரியுமா தெரியாதா என்றால் அவர் ஊராளி கவுண்டர் சாதியைச் சேர்ந்தவர் ஆவார். முதல் எதிரி இந்து பறையர் வகுப்பைச் சேர்ந்த நபர் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் இருக்கக்கூடிய எந்த எதிரியின் சாதியும் எனக்குத் தெரியாது என்றும்,

எனது சாதியும் அவர்களுக்கு தெரியாது என்றால் சரியல்ல. என்னை தாக்கியதாக சொல்லக்கூடிய நபர்களை கண்டுபிடிக்க முடியாத காரணத்தினால் அருகில் இருந்த சுண்டக்காம்பட்டி மற்றும் கருமகவுண்டன்பட்டி கிராமத்தை சேர்ந்த நபர்கள் மீது பொய்யாக வழக்கு போடப்பட்டது என்றால் சரியல்ல. அன்றைய தினம் சம்பவத்தில் ஈடுபட்டதாக சொல்லக் கூடிய நபர்களின் அங்க அடையாளங்களை நான் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரியல்ல.

**குறுக்கு விசாரணை (7 முதல் 10 எதிரிகள் தரப்பில்)**

எதிரிகளுக்கும் வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் நான் சொன்ன விதத்தில் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் என்னை தாக்கவில்லை என்றும், எதிரிகள் சாதி குறித்து இழிவாக பேசவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**மறுவிசாரணை – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.

DEPOSITION OF WITNESS
IN THE I ADDITIONAL DISTRICT COURT (PCR),
TIRUCHIRAPPALLI.
Spl.S.C.No.43/2025
P.W.2

| | | |
|---|---|---|
| Name | : | திரு.பூவரசன் |
| Father's Name | : | திரு.ரெங்கன் |
| Village | : | |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | 28 |

(Accused 1 to 10 are present)

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 9th day of April 2026.

**முதல் விசாரணை**

நான் மணப்பாறை, கீழப்பொய்கைப்பட்டியில் வசித்து வருகிறேன். நான் பறை அடிக்கும் கலைக்குழுவில் தொழில் செய்து வருகிறேன். நான் இந்து அருந்ததியர் வகுப்பைச் சேர்ந்தவர் ஆவேன். அ.சா.1 அஜித்குமாரை தெரியும். எதிரிகள் அனைவரையும் தெரியும். எதிரிகள் அனைவரும் இந்து ஊராளி கவுண்டர் வகுப்பை சேர்ந்தவர்கள் ஆவார்கள். கடந்த 06.09.2024ம் தேதி பிள்ளையார் கோவில் பட்டியில் தப்பு செட்டு குழு வேலை முடித்து மாலை 4.00 மணியளவில் பன்னாங்கொம்பு பஸ் ஸ்டாப் அருகில் உள்ள நியூ அய்யங்கார் பேக்கரியில் சம்பள பணம் பிரித்துக் கொடுத்துவிட்டு அ.சா.1 வண்டியில் உட்கார்ந்து கொண்டு டீ குடித்துக்கொண்டு இருந்தார். நான் அவருடன் அருகில் இருந்தேன். அப்போது எதிரிகள் என்னடா நாங்கள் நின்று கொண்டிருக்கிறோம், நீ உட்கார்ந்து கொண்டு இருக்கிறாய் பறப்பயலே என்று அ.சா.1

Approved

அஜித்குமாரை திட்டினார்கள். நான் சண்டையை விலக்கிவிட்டேன். சிறிது நேரம் கழித்து 20 நபர்கள் வந்தார்கள். அ.சா.1 அஜித்குமாரை தலை முடியை பிடித்து இழுத்து அந்த கடை பக்கத்தில் இருந்த ஒரு வீட்டிற்குள் இழுத்துக்கொண்டுபோய் அடித்தார்கள். அ.சா.1 அஜித்குமார் நடந்த சம்பவத்திற்கு புத்தாநத்தம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார். இந்த வழக்கு தொடர்பாக காவல் துணை கண்காணிப்பாளர் என்னை விசாரித்தார்.

**குறுக்கு விசாரணை(1 முதல் 6 எதிரிகள் தரப்பில்)**

நான் சண்டையை விலக்கி விட்டதாக சொன்ன பிறகு 20 நபர்கள் மீண்டும் வந்து அஜித் குமாரை தாக்கியதாக சொல்லக்கூடிய விவரத்தை போலீசார் என்னை விசாரித்த போதும் சொன்னேன். அஜித் குமாரை அந்த நபர்கள் பக்கத்தில் இருந்த வீட்டிற்குள் இழுத்துக் கொண்டு போய் அடித்தார்கள் என்று போலீசார் விசாரித்த போது சொல்லவில்லை. தற்போது நீதிமன்றத்தில் தான் முதன்முறையாக இந்த சங்கதியை கூறுகிறேன். நான் முதன் முதலாக சென்று பார்க்கும் போது அய்யங்கார் பேக்கரிக்குள் 20 நபர்கள் கும்பலாக இருந்தார்கள் என்றால் சரிதான். அப்போது ஒருத்தருக்கு ஒருத்தர் விலகிக் கொண்டு இருந்தார்கள். நானும் உடன் சென்று விலக்கி விட்டேன். காவல்துறையினருக்கு நான் தான் போன் மூலம் தகவல் சொன்னேன். அன்று மாலை 4 மணி முதல் 4.30 வரை சண்டை நடந்தது. அதன் பிறகு அன்று மாலை 5:30 மணிக்கு மேல் போலீசார் அங்கு வந்தார்கள். போலீசார் அன்றைய தினம் நியூ ஐயங்கார் பேக்கரியில் வைத்து விசாரிக்கவில்லை. எங்களை காவல் நிலையத்திற்கு வரச் சொல்லி விட்டார்கள். அந்த இரவு 7 மணிக்குள்ளாக புத்தாநத்தம் காவல் நிலையத்திற்கு சென்று விட்டோம். அப்போதே விசாரித்து எங்களிடம் எழுதி வாங்கி விட்டார்கள். அதன் பிறகு இரண்டு மூன்று

நாட்களில் காவல்துணை கண்காணிப்பாளர் விசாரித்தார். எதிரிகளை எனக்கு சம்பவத்திற்கு முன்பு தெரியாது. அவர்களுக்கும் எனக்கும் இடையில் எந்த விரோதமும் கிடையாது. அஜித் குமார் எனது நெருங்கிய நண்பர் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக உண்மைக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. நான் சொல்லக்கூடிய சம்பவத்திற்கும் எதிரிகளுக்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

**<u>குறுக்கு விசாரணை(7 முதல் 10 எதிரிகள் தரப்பில்)</u>**

எதிரிகளுக்கும் வழக்கிற்கும் எந்தவித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. எதிரிகள் நான் சொன்ன விதத்தில் சொன்ன இடத்தில் சொன்ன நேரத்தில் என்னை தாக்கவில்லை என்றும், எதிரிகள் சாதி குறித்து இழிவாக பேசவில்லை என்று சொன்னால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை</u> – இல்லை.**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி மற்றும் அவரது வழக்கறிஞர் முன்னிலையில் சாட்சியின் வாக்குமூலம் என்னால் தட்டச்சருக்குச் சொல்லப்பட்டு, அவரால் கணினியில் வடிவாக்கப்பட்டு, சாட்சியிடம் படித்து காட்டப்பட்டு விளக்கிக் கூறப்பட்டு சாட்சியால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு கைரேகை/கையொப்பம் செய்யப்பட்டது.

(ஒம்.).XXXXX,
முதலாவது கூடுதல் மாவட்ட நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.